முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மணப்பாறை

தேதி : 07.04.2026

**அசல் வழக்கு எண். 77/2025**

**வா.சா.1 (லூர்துமேரி) : <u>சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கிற்கு எனது வழக்கறிஞரிடம் விவரம் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு விவரம் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு எழுத, படிக்க தெரியும். பிரதிவாதிகள் எனது மாமனார் செபஸ்தியான் என்பவரின் சகோதரர் மைக்கேல் என்பவரின் பிள்ளைகள் என்றால் சரிதான். செபஸ்தியான் மகன் தான் எனது கணவர் அமல்ராஜ் என்றால் சரிதான். செபஸ்தியான் என்பவரிடமிருந்து நான் 2019 ம் வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அவர் என் மாமனார்.

2. செபஸ்தியான், மைக்கேல், ரபேல் ஆகியோருடைய தகப்பனார் பெயர் ராயப்பன் என்றால் சரிதான். ராயப்பன் முதல் மனைவி பெயர் அருளாயி என சொல்லுவார்கள். எனக்கு சரியாக தெரியாது. 2 வது மனைவி பெயர் என்னவென்றால் சவரியாயி என சொல்வார்கள். சவரியாயிக்கும் ராயப்பனுக்கும் அருளாயி இறந்தபிறகு தான் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதி பெயரிலுள்ள வரி ரசீது, எனது பெயரிலுள்ள விவசாய சான்றிதழ், சவரியாயி பெயரிலுள்ள பட்டா, செபஸ்தியான் பெயரிலுள்ள கிரைய பத்திரம், தாவா சொத்திற்கான வில்லங்க சான்று ஆகியவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

3. வழக்கு தாக்கல் செய்தபோதே அந்த ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். தாவா வழக்கில் பிரதிவாதிகளின் கட்சியை தெரிந்து கொண்டு பின்னிட்டு மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. 658/2A3 நான் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். இதற்கு முன்பு தாவா சர்வே எண். 658/2 ஆக இருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது.

4. ராயப்பன் முதல் மனைவி அருளாயி இறந்த பின்னர் சவரியாயி என்பவரை 1967ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார் என்றால் அவ்வாறு சொல்கிறார்கள். எனக்கு சரியாக தெரியாது. திருமணம் செய்து ஒரு வருட காலத்திலேயே 1968ம் ஆண்டு விவகாரத்து செய்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்து எனது மாமனார் பெயரில் இருந்தது. எனது மாமனாரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். 2வது மனைவி சவரியாயிக்கு 1967ம் ஆண்டு 39 சென்ட் கிரையம் கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. 1968ம் ஆண்டு சவரியாயியை விவகாரத்து செய்ததால் 39 சென்ட் நிலத்தை இரத்து பத்திரம் எழுதி இரத்து செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. சவரியாயிக்கு கொடுத்த சொத்தை இரத்து செய்துவிட்டதால் சவரியாயி எனது மாமனார் செபஸ்தியானுக்கு 09.01.2007ல் எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.7 பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. செபஸ்தியான் 06.09.2019ம் தேதியிட்டு எனக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை எழுதி கொடுக்க செபஸ்தியானுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

6. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 சவரியாயி பெயரிலுள்ள பட்டா பாஸ்புத்தகம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் நில உரிமையாளர் பெயர் சவரியாயி என்பது திருத்தப்பட்டு கணவர் ராயப்பன் என்பது திருத்தப்பட்டுள்ளது என்றால் சாட்சி பார்த்துவிட்டு எனக்கு அது பற்றி தெரியாது

என சாட்சியம் அளிக்கிறார். வா.சா.ஆ.6 ஆவணத்தில் சவரியாயி, ராயப்பன், கிறிஸ்டியன் மற்றும் கிராமத்தின் பெயர் ஆகியவை திருத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் கிரையம் கொடுத்தார். நான் கிரையம் வாங்கினேன்.

7. ரபேல், செபாஸ்தியான் 2 பேரும் பிரதிவாதிகளின் தகப்பனார் மைக்கேலுக்கு பதிவு செய்யப்படாத பாக விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டிட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் இன்றைய தேதி வரை இந்த பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தவறு. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

8. வா.சா.ஆ.4 தாவா சொத்திற்குரிய வரி ரசீது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய வரிரசீது தான். வா.சா.ஆ.3 எனது மாமனார் பெயரிலுள்ள பட்டா மோசடியாக ஏற்படுத்தப்பட்ட பட்டா என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 வில்லங்க சான்று வழக்கின் முழு விவரத்தை பிரதிபலிப்பதாக இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

இத்துடன் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிவடைகிறது.

மறுவிசாரணை இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.**

**(ஒப்பம்/-திரு. V. ஜெயமுருகன்)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**மணப்பாறை**